
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
தேஜோமயானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் தேஜோ மயானந்தம்


## அருள்நிதி
## மன்னார்குடி பானுகுமார்


இதனுள்ளே

1. அறிவான தெய்வமே
2. ஆணவம் அழிந்தால் முக்தி.
3. அகத்தவத்தால் மன அலைச்சுழலை குறைக்கலாமே!
4. இந்த அறிவு எதனால் வந்ததோ?
5. கருணை காட்ட மாட்டாயோ?
6. அறிவறிய வேண்டு மெனில்
7. முழுமைப் பேறு அடையலாமே!
8. சிந்தையை அடக்கியே
9. சும்மா இருக்கின்ற திறமரிது
10. மரணமில்லா நிலை
11. பெண்ணின் பெருமை

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூஜைகொள்ள வாராய் பராபரமே.”

தாயுமானவர் தேஜோமயானந்தம் என்ற தலைப்பில் 176 வரிகளில் பதினொரு பாடல்களைப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும். . . . .

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.”

“தேடுதற்கு அரிய நிலையான இருப்பாகி, எனது சித்தத்தில் குடிகொண்ட, அறிவுமயமான கடவுளே! ஒளியுடன் விளங்கும் பேரின்பமே!”

என்று முடிக்கிறார். வேதாத்திரியமோ “மனிதனுடைய அறிவானது பிரபஞ்சத்திற்கு ஆதிபொருளாக உள்ள தெய்வநிலை” என்று அழுத்தமாக பதிவு செய்துள்ளது.

## 1. அறிவான தெய்வமே

நம் உள்ளம் ஒரு பெரிய கோயில், ஊனாகிய இந்த உடம்பு ஓர் ஆலயம். வள்ளலான கடவுளைப் புகழ்கின்ற இந்த வாய்தான் அந்தக் கோயிலுக்குக் கோபுர வாசல்.

தெளிவான உண்மையை உணர்ந்தவர்களுக்கு உள்ளே இருக்கும் ஆன்மா (சீ)வன்) தான் கடவுள் (சிவலிங்கம்).

நம்மை ஏமாற்றக்கூடிய கள்ளத்தனம் நிறைந்த ஐந்து புலன்களும்தான் இருட்டைப் போக்கும் மணிவிளக்குகள்.......என்று நமது உடம்பே ஆலயம் என்று சொல்கிறது திருமந்திரம்.

உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்,
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்,
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கு

உடல்பொய்யுறவு” என்று சொல்லியிருந்தாலும், உடம்பின் உன்னதத்தை உணர்ந்த தாயுமானவர், இந்த உடம்பு இருக்கும் காலத்திலேயே இறையுணர்வு பெற்று இறைநிலையில் லயித்திருக்க வேண்டும் என்கிறார்.

மருமலர்ச் சோலைசெறி ந நஷல்நீழல்ழல் மலைஆதி
மன்னும் முனி வர்க்கு ஏவலமாய்,
மந்த்ரமா லிகைசொல்லும் இயமநிய மாதியாம்
மார்க்கத்தில் நின்றுகொண்டு,

கருமருவு காயத்தை நிர்மலது ஆகவே
கமலாச னாதி சேர்த்துக்,
காலைப் பிடித்து, அனலை அம்மை குண் டலி அடிக்
கலைமதியி னூடுதாக்கி,

உருகிவரும் அமிர்தத்தை உண்டு உண்டு, உறங்காமல்
உணர்வான விழியைநாடி,
ஒன்றோடு இரண்டு எனச் சமரச சொரூப சுகம்
உற்றிட, என் மனதின் வண்ணம்

திருவருள் முடிக்க இத்தேகமொடு காண்பனோ?
தேடரிய சத்து ஆகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே." (தா.பா.111)

- மணமலர்கள் நிறைந்து காணப்படும் சோலையின் அடர்ந்த நல்ல நிழலிலும்,
- மலை முதலிய இடங்களிலும் தங்கி இருக்கும் முனிவர்களுக்குப் பணிவிடை செய்து.
- "மந்தத்ர மாலிகை" என்னும் நூலில் சொல்லப்பட்ட இயமம், நியமம் முதலியவாக விளங்கும் அட்டாங்க யோக நெறியில் நின்று கொண்டு.
- கருவில் தங்கிப் பிறந்த உடம்பை மலமற்ற தேகமாக மாற்ற,
- பத்மாசனம் முதலிய ஆசனத்து இருந்து.
- பிராணனைக் கட்டுப்படுத்தி,
- மூலாதராத்தில் அனலை உண்டுபண்ணி,
- அம்மை குண்டலினியை பதினாறு கலைகளுடன் விளங்கும் சந்திரமண்டத்தில் மோதச் செய்து,
- அங்கு ஊறும் அமுதத்தை உண்டு,
- உறங்காமல் இருந்து,
- ஞானக்கண் கொண்டு பார்த்து,

- ஒன்று என்னாமலும், இரண்டு என்னாமலும், பொதுத்தன்மை கண்டு.

என் எண்ணத்தின்படி இன்பம் பெறும் ஒரு நிலையைத் திருவருள் தந்து அருளுவதை, இந்த உடம்பு இருக்கும் காலத்திலேயே கண்டு அனுபவிப்பேனோ?

"சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று அறிவே தெய்வம் என்பதை தாயுமானவர் சொல்லுகிறார்.

தாயுமானவர் வழி வந்த வேதாத்திரியாரும் அறிவின் சிறப்புகளையும் எளிமையாக சொல்லுகிறார்.

"மனதின் அலையை குண்டலினியோகத்தின் மூலம் குறைத்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நிலைக்குக் கொண்டு வந்து, இவனே அதுவானால் தான் அந்த நிலையில்தான் அறிவே தெய்வம் ஆகும்" (ஞாக.பா.)

நமது மனஅலைச்சுழலை குறைக்க என்ன செய்ய வேண்டும்? தவம் செய்யவேண்டும்.

ஆக்கினை, துரியம், துரியாதீதம் தவங்களினால் படிப்படியாக நமது மன அலைச்சுழல் குறைந்து கொண்டே வரும்.

துரியாதீதத்தில மனஅலைச்சுழல் நின்று இறையில் நிலையாகிவிடும். அப்போது மனிதன் அதுவாகிறான். இறைநிலையாகின்றான். அந்த நிலையில் அறிவே தெய்வம் என்பதை உணருகிறார்.

"அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்,
அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி
அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்;
அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர், அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்,
அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்
அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வோம்" (தா.பா.7)

தாயுமானவர் திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் என்ற பகுதியில் முதல் கவியாகிய அங்கிங்கெனாதபடி....என்ற கவியில் இறைநிலையின் இயல்பு பற்றிய முழமையான விளக்கம் கொடுத்துள்ளார்..

"தன்னை அறியத் தனி அறிவாய் நின்றருளும்
என்னை அறிந்து என்னறிவை நீங்கி நிற்க வேண்டாவோ"

"வேண்டாவோ என் கண்ணி" என்ற தலைப்பில் ஆதங்கப்படுகிறார் தாயுமானவர்.

"உயிரானது தன்னை அறியும் பொருட்டுத் தனிப் பேரறிவாய் விளங்கும் உன் உண்மையினை அறிந்து, யான் உடலுடன்கூட அறியும் பாச ஞானத்தினின்று நீங்கி உன் அறிவினால் அடங்கி நிற்க வேண்டாவோ" என்று அறிவுதான் தெய்வமென்பதை நிலைநிறுத்தியுள்ளார்.

திருவள்ளுவரும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே.

"ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்"

என்று உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வம், அந்நிலை உணரப் பெற்றவர்கள் தெய்வமாகவே வாழ்வார்கள் என்கிறார்.

திருமூலரும் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே.

"தன்னைத்தானறிய தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகின்றான்
தன்னையறிவும் அறிவை அறிந்தபின்

தன்னையே யர்சிக்கத்தானிருந்தானே”

என்று தவம் செய்வதன்மூம் தன்னையும் அறியலாம் தலைவனையும் அறியலாம் என்று அதற்கான வழி முறைகளையும் சொல்லியுள்ளார்.

இராமலிங்க வள்ளலாரும்,

“அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை என்றும் ஜோதி ஜோதி ஜோதி சுயம், ஜோதி ஜோதி ஜோதி பரம்” என்றும் ஆனந்தக் கவிகளை வெளிப்படுத்தினார்.

அறிவின் தெளிவு என்ற நிலையில் எல்லாவற்றையும் உணரலாம் என்று சொல்லியுள்ளார்.

அறிவேதான் தெய்வம் என்று துணிந்துரைத்த அருட்தந்தையின் அன்புக்குரலில் சொல்கிறார்......அறிவின் உயர்வு பெற்று, அதன் மதிப்பும் சிறப்பும் உணர்ந்து நிறைவு பெறுவதே மனிதப்பிறவியின் நோக்கமெனினும், அது வெற்றி பெற உடலை நலமோடும் வளமோடும் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்கிறார்.

அறிவுதான் தெய்வம் என்பதை உறுதிப்படுத்தி, அறவழி வாழ்வில் வாழ்ந்து காட்டி வழியும் காட்டியுள்ள குருமார்களை எப்போதும் நினைவில் நிறுத்தி வாழ்வோம்.

## 2. ஆணவம் அழிந்தால் முக்தி.

தன்முனைப்பு நீங்கி, ஒரு குரு அடைந்து, தவமாற்றும் சாதனையால் உயரும்போது, தன்முனைப்பாம் அருட்தொண்டால் பயன் காண்போர்கள், நாதழுக்கப் பெருமையோடு போற்றுவார்கள்.

அப்படித்தான் மாணிக்கவாசகரும் பெருமையோடு இங்கு பேசுகிறார்.

வீடு என்ற முக்தி அடைவதற்கு உரிய நெறி இன்னது என்று அறியாது, அறிந்தும் முயலாது இருப்பவரோடு சேர்ந்து நானும் முயலாது இருந்தேன்.

அப்படிப்பட்ட எனக்கு அன்பு நெறியை காட்டிக் கொடுத்து, பழைய வினைகள் கழியுமாறும் மலக் குற்றங்கள் நீங்குமாறும் செய்து, சிவமாம் தன்மையைத் தந்து, எம் தந்தை ஆட்கொண்டான். இப்படிப்பட்ட அருளை யாரால் பெற முடியும்? இது அதிசியமே" என்கிறார் மாணிக்கவாசகர்.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத் தநெறி அறிவித்துப் பாழ  வினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன்  எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே."
(திருவாசகம் பா.650)

சொல்லுதற்கு அருமை உடைய முத்தி ஆகிய கரையில் கொண்டு சேர்க்க, அருள் செய்வாயோ? என்று இந்தப் பாடலில் தாயுமானவர் வேண்டுகிறார்.

இப்பிறவி என்னும்; ஓர் இருட்கடலில் மூழ்கிநான்
  என்னும் ஒரு மகரவாய்ப்பட்டு,
இருவினை எனும் திரையின் எற்றுண்டு, புற்புதம்
  எனக்கொங்கை வரிசைகாட்டும்

துப்பு இதழ் மடந்தையர் மயல்சண்ட மாருதச்
  சுழல்வந்து வந்து அடிப்பச்,
சோராத ஆசையாம் கான்ஆறு வான்நதி
  சுரந்தது என மேலும் ஆர்ப்பக்

கைப்பரிசு காரர்போல் அறிவுஆன வங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்,,
கள்ளவங் கக்காலர் வருவர் என்று அஞ்சியே
கண் அருவி காட்டும் எளியேன்,

செப்பரிய முத்தியாம் கரைசேரவும் கருணை
செய்வையோ? சத்து ஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே." (தா.பா.112)

- இந்தப் பிறவி எனப்படும் இருண்ட கடலில் முழ்கி.
- "நான்" என்னும் ஒரு சுறாமீனின் வாயில் அகப்பட்டு.
- இருவினை என்னும் அலைகளால் மொத்துண்டு.
- நீர்க்குமிழிபோல தோன்றி மறையும், மலைஅழகு காட்டும் பவளம்போல சிவந்த உதட்டினை உடைய மகளிர் இன்பமாகிய சூறைக்காற்று சுழன்று வந்துவந்து வீச.
- குறைவுபடாத ஆசையாகிய காட்டாறு, ஆகாய கங்கை சொரிவது போல, மேலும் வந்து ஆரவாரம் செய்ய.
- சிறிய தோணிக்காரன்போல் முதறிவு என்னும் பெரிய கப்பலை நழுவவிட்டு. அறிவு மயங்கி,
- கள்ளக் கப்பலாய் எமதூதர் வருவர் என்று பயந்து. கண்களில் அருவிபோல நீர் பொழிய நிற்கும் எளியேனை,

சொல்லுதற்கு அருமை உடைய முத்தி ஆகிய கரையில் கொண்டு சேர்க்க, அருள் செய்வாயோ?

(பிறவி கடலாகவும், செருக்கு சுறாமீனாகவும், இரு வினைகள் அலைகளாகவும், மாதர் இன்பம் சூறைக் காற்றாகவும், ஆசை காட்டாறாகவும், மூதறிவு கப்பலாகவும், எமதூதர் திருட்டுக் கப்பலாகவும், முத்தி கரையாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ள நயம் காணலாம்.)

### ஆணவம் அழிந்தால் முக்தி

**மனிதனை மண்ணாக்குவது தன்முனைப்பு தான். ஆணவமே அழிவுக்கு அச்சாரம். அறியாமையின் அடையாளமும் கூட. நான், தனது என்பது ஆணவத்தின் இரு கிளைகள்.**

**எல்லாமும் தனதாக வேண்டும். எல்லோரும் தனதடிமையாக வேண்டும் என்பது ஆணவத்தின் எழுச்சி பெற்ற நிலை.**

**ஆணவம் என்ற தன்முனைப்பு நீங்க வழி காட்டுகிறது வேதாத்திரியம்.**

**"தன்முனைப்பு நீங்க ஒரு குரு அடைந்து,**
**தவம் ஆற்றும் சாதனையால் உயரும்போது,**
**நன்முனைப்பாம் அருட்தொண்டால், பயன்காண் போர்கள்,**
**நாதழுக்கப் பெருமையோடு போற்று வார்கள்!**
**உன்முனைப்பு நிலவுஒளி ரவியால் போல,**
**உயர்கருவின் ஒளிஎன்றே உணர்ந்து அடங்கு!**
**"என்ஒளியே சிறந்ததினி ரவிஒளி ஏன்**
**எனக்கு?" என்று நிலவ எண்ண, இருளே மிஞ்சம்!** (ஞாக.பா.1586)

**தன்முனைப்பு நீங்க வேண்டுமானால், அதற்குத் தகுந்த குருவின் உதவியோடு அகத்தவம் பழக வேண்டும்.**

**அப்படிப்பட்ட குருவின் மூலம், அகத்தவ சாதனையில் உயர்வடைகின்ற காலத்தில், இறைமுனைப்பின் எழுச்சியினால் செய்யப்படும் அருட்தொண்டினால் பயன் அடைபவர்கள், உணர்ச்சி**

நிலையில் நாவால் பெருமையான வார்த்தைகளைக் கூறிப் போற்றுவார்கள்.

அப்போது, சந்திரனானது சூரியனிலிருந்து ஒளியைப் பெற்று பிரதிபலிப்பது போலத் தனக்கு அமைந்த உயர்வான அருட் தொண்டிற்கு இறைநிலை என்னும் குருவின் அருளாற்றல்தான் காரணம் என்று உணர்ந்து அடக்கத்துடன் இருக்க வேண்டும்.

என்னுடைய ஒளிதான் சிறந்தது. இனிமேல் எனக்கு சூரியனின் ஒளி எதற்கு என்று நிலவு எண்ணுமேயானால் இருள்தான் மிச்சமாகும்.

ஒளி பெறவும், பிரதிபலிக்கவும் முடியாது. ஆகவே இறை நிலையின் கருவியாக நான் செயல்படுகிறேன் என்ற எண்ணத்தில் மனிதன் வாழ வேண்டும்.

அளவு கடந்த அன்பின் வெளிப்பாட்டில் ஆழமான அமைதியுடன் ஆரவாரமற்று தன்முனைப்பின்றி வாழ்கிற வாழ்க்கையின் மறுபெயர் முக்தி.

## 3. அகத்தவத்தால் மன அலைச்சுழலை குறைக்கலாமே!

மனம் தெளிவடைய அருமையான ஜென் கதை
ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான் அவனுக்கு எல்லாம் இருந்தாலும் மனதில் நிம்மதி இல்லாமல் ஒரே குழப்பதிலே இருந்தான்.

ஒரு ஜென் குருவை சந்தித்து ஐயா எனக்கு ஜென் கற்க ஆசை சொல்லிக்கொடுங்கள் என்றான் .

இவனின் அவசரமான பேச்சை கவனித்த குரு, இதோ பாரப்பா உன் மனம் ஒரு நிலையாக இல்லை, நான் என்னதான் கற்றுக் கொடுத்தாலும் உனக்கு புரியாது நீ போயிட்டு அப்பறம் வா என்கிறார்.

இருந்தாலும் இவன் விடவில்லை.

ஐயா என்னால் போகமுடியாது தயவுசெய்து எனக்கு நீங்க ஜென் சொல்லித்தரனும் மற்றும் எனக்கு நிறைய குழப்பங்களும் சந்தேகமும் இருக்கு அதெல்லாம் நீங்கதான் தீர்த்து வைக்கணும் என்கிறான்.

அப்படியென்றால் சரி நான் உன்னை எனது சீடனாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை இங்கே நீ ஒரு ஆறுமாதம் மௌனவிரதம் கடைபிடிக்கவேண்டும் சரியா?

ஆறு மாதம்மா? சற்று யோசித்து- சரிங்க ஐயா இருக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்தான்.

ஆனால் ஆறு மாதம் கழித்து எனது சந்தேங்களை நீங்க போக்கணும் சரியா?

சரி சரி அதெல்லாம் உன் மனதில் வச்சிக்கோ நான் ஆறு மாதம் கழித்து உனது அனைத்து குழப்பங்களையும் நீக்குகிறேன் என்றார் குரு.

அதன்பின் அந்த பணக்காரன் ஆசிரமத்தில் சேர்ந்து மௌனவிரதத்தை கடைபிடிக்கிறார். அடுத்தடுத்து அவருடைய நேரங்கள் முழுவதும் தியானம், மந்திரம் ஜெபிப்பது, ஆன்மீக சொற்பொழிவை கேட்பது இப்படியே நாட்கள் ஓடியது.

மெல்ல மெல்ல அவருடைய மனம் தெளிந்தது, முன்பு குழம்பிருந்த விஷயங்கள் எல்லாமே தெளிவாக புரிய ஆரம்பித்தது.

ஆறுமாதம் கழித்து குரு அவரை அழைத்தார், நீ மௌன விரதம் இருந்தது போதும் இப்போது உனது சந்தேகங்களை கேள் என்றார்.

உடனே அந்த பணக்காரன் அமைதியான குரலில் கேட்பதற்கு ஒன்றும் இல்லை குருவே எல்லா குழப்பங்களும் எனக்கு நீங்கியது

இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று.

இந்த கதை நமக்கு உணர்த்துவது என்னவென்றால் " சும்மா கேள்வி கேட்டால் மட்டுமே நமக்கு பிரச்சனைகள் நீங்காது மற்றும் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடையமுடியாது சொல்லும் விசயங்களை கேட்டு சில மாதங்களோ அல்லது வருடங்களோ பயிற்சி செய்யவேண்டும்.

**மனம் குழப்பம் என்றால் அப்படியேதான் இருக்கும் , சிலநேரங்கள் மௌனமாக மனதை கவனியுங்கள்**

அப்போதுதான் மனம் தெளிவடையும். மனம் தெளிந்தால் தானாக எல்லாமே புரியவரும்.

**அந்தப் பணக்காரனைப் போலவே "மனம் சுழலாமல் அலைபாயாமல், வெட்டவெளியில் திளைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்கிறார் தாயுமானவர் இந்தப் பாடலில்.**

தந்தைதாய் தமரதாரம் மகவு என்னும் இவையெலாம்
சந்தையில் கூட்டம், இதிலோ
சந்தேகம் இல்லை, மணி மாடம் மாளிகைமேடை
சதுரங்க சேனையுடனே

வந்தது ஓர் வாழ்வும் ஓர் இந்த்ர ஜாலக்கோலம்.
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்த மனமாம் கிருமி சேர்ந்த மல பாண்டமோ
வஞ்சனை இலாதகனவே.

எந்தநாளும் சரி எனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபக லில்லா இடத்து
ஏகமாய் நின்றநின் அருள்வெள்ள மீதிலே
யான் என்பது அறவும் முழ்கிச்

சிந்தைதான் தெளியாது சுழலும்வகை என்கொலோ?

தேடரிய சத்து ஆகினன்
சித்தமிசை குடிகொண்ட அறிவு ஆன தெய்வமே.
தேசோ மயானந்தமே” (தா.பா.113)

- தந்தை தாய், உறவினர், மனைவி, பிள்ளைகள் என்னும் இவை அனைத்தும் சந்தையில் கூடும் கூட்டம்போல் கலைந்து செல்லும் தன்மையுடையது.
- இதில் எந்தவித ஐயமும் கொள்ள வேண்டா.
- அழகிய மாளிகை, மண்டபம், உப்பரிகை, நால்வகைப் படைகள் என இவற்றுடன் வாழும் பெருவாழ்வும் ஒரு கண்கட்டு வித்தைபோல் வாழும் பெருவாழ்வும் ஒரு கண்கட்டு வித்தைபோல ஏமாற்றும் தன்மை உடையதுவே.
- வஞ்சனை, பொறாமை, உலோபம் ஆகியவை தங்கிய மனமெனும் புழு தங்கி இருக்கும் அழுக்கைச் சுமக்கும் உடல் எனிலோ, அதுவும் விருப்பம் கொள்ளுதற்கு இயலாத கனவு போன்றது ஆகும்.

எப்பொழுதும், வாழ்வையும் தாழ்வையும் சமமாகக் கண்டு, இரவுபகல் அற்ற வெளியில், ஏகமாய் நிற்கும் நினது திருவருள் வெள்ளத்தில், “யான்” என்னும் நினைப்பு அற மூழ்கி, சிந்தை தெளிவு பெறாது, மனமானது சுழல்வது எதனாலோ?

மனம் சுழலாமல் அலைபாயாமல், வெட்டவெளியில் திளைத்திருக்க என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் வழி காட்டுகிறது,

“அகத்தவத்தால் மனச்சுழலைப் படிப்படியாய்க் குறைத்து
ஆதிநிலை ஒன்றுவரை பழக்கமாக்கிக் கொண்டால்,
இகத்துணர்வோடு எல்லையிலா இறைநிலையும் உணர
ஏற்றபடி அவ்வப்போ பொருந்திவரக் காண்போம்.
மிகத் தெளிவும் உள்ளுணர்வு ம முற்றறிவும் கிட்டும்.
மூலம் எனும் இறைமுதலாய் மனிதன்வரை வந்த
மகத்துவமாம், முத்தரமே முத்திறமாய் மலர்ந்த
மறைபொருளை அறிவுணரும், பிரம்மஞானம் கிட்டும்”
(ஞாக.பா.1446)

மனம் என்பது மனிதனின் அனுபோக அனுபவங்களுடன் கூடிய ஜிவகாந்த அலை ஆகும். இதனை மன அலைச்சுழல் என்கிறோம்.

மன அலைச்சுழல் வேகம் ஒரு விநாடிக்கு ஒன்று முதல் நாற்பது வரை இயக்கமாகிறது.

ஒன்றிற்கு குறைந்தாலும் நாற்பது சுழல்களுக்கு மேல் அதிகமானலும் உயிரானது உடலை விட்டு அகன்றுவிடும்.
இயக்கம் நின்றுவிடும்.

சாதாரணமாக புலன்கள் மூலம் இயங்கும்போது பதினாறு முதல் நாற்பது வரை சுழல் வேகம் உள்ளது.

உயிர்மேல் மனம் செலுத்தும் குண்டலினயோகம் என்னும் அகத்தவத்தினை இயற்றி, மன அலைச்சுழல் வேகத்தைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டு வந்து,

ஆதி நிலையாகிய இறைநிலையில் நிறுத்தி பழகிக் கொண்டு விட்டோமேயானால்,

நில உலக வாழ்வில் கடமைகளை ஆற்றும் போதும் இறை உணர்விலேயே செயல்படக்கூடிய தகைமை கிட்டும்.

**எந்தப் பொருளோடும் எந்த உயிரோடும் தொடர்பு கொள்ளும்போது பிணக்கின்றி, இணக்கத்துடன் வாழமுடியும்.**

அறிவில் தெளிவும், முற்றறிவும், உள்ளுணர்வும் கிட்டுவதே அதற்குக் காரணம் ஆகும்.

தோற்றங்களுக்கொல்லாம் மூலமாகவும் ஆதியாகவும் உள்ள மெய்ப்பொருளே மனிதன் வரை தன் மாற்றம் அடைந்து,

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு எனும் முத்தரமே, தன்மாற்றம், இயல்பூக்கம், கூர்தலறம் எனும் முத்திறமாக மலர்ச்சி பெற்றுள்ளது

என்ற மறைபொருளை அறிவை உணர்ந்து கொள்ளும் பிரம்மஞானம் என்னும் இறையுணர்வு கிட்டும்.

## 4. இந்த அறிவு எதனால் வந்ததோ?

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம் என்ன? அறிவு முழுமை பெற வேண்டும்.

இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம். (This and this alone is the purpose of life)

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி,

தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும். பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்பந்தம்)

இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம். இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது,

பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும்.

விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும். அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும்.

அத்தகைய திருப்பம் எதுவோ அது தான் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் எனப்படும் ஆன்மீக வாழ்வு ஆகும்

வாழ்வின் நோக்கமறியாது –

சரியை,கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறியிலும் என்ற பாதையில் பயணிக்காமல் இருக்கிறேனே?

என்று இந்தப் பாடலில் புலம்புகிறார் வேதனைப்படுகிறார் வருத்தப்படுகிறார் தாயுமானவர்.

ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்விசை
அடங்கி மனம்வீழ, நேரே
அறியாமை ஆகின்ற இருள் அகல இருள் ஒளியும்
அல்லாது இருந்தவெளிபோல்

கோடாது எனைக்கண்டு எனக்குள் நிறை சாந்தவெளி
கூடிஇன் பாதீதமுங்
கூடினே னோ. சரியை கிரியையில் முயன்று நெறி
கூடினே னோஅல்லன்யான்

ஈடாக ஆவேயாறு வீட்டினில் நிரம்பியே
இலகிவளர் பிராணன் என்னும்
இருநிதி யினைக்கட்டி யோகபரன் ஆகாமல்
ஏழைக் குடும்பனாகித்

தேடாது அழிக்க ஒரு மதிவந்தது என்கோலோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவு ஆன தெய்வமே.
தேசோ மயானந்தமே”
(தா.பா.114)

- (சுழன்று) பின்னர் சுழல்வதை நிறுத்திக் கொண்ட பம்பரம் போல ஆற்றலானது அடங்கி மனம் சோர,
- நேரே அறியாமை எனப்படும் இருளானது விலக,
- இருளும் ஒளியும் (இரவம் பகலும்) இல்லாத அறிவுப் பெருவெளி போல பிழையற என்னைத் திருவருளால் கண்டு,
- என்னுள் நிறைந்து நீங்காது நிற்கும் அமைதிப் பெரு வெ ளியனைச் சார்ந்து,
- மேலான இன்பம் கைகூடப் பெற்றேனோ?
- அல்லது சரியை, கிரியை முதலிய நெறிகளில் முயன்று, முன்னேறினேனோ?

இவை எவற்றையும் நான் செய்யவில்லை.

.

- அல்லது இவற்றுக்கு மாற்றாக, இடகலை பிங்கலை எனப்படும் இரு மூக்குத் துளையின் வழி வெளியேறும் பிராணனை கட்டுப்படுத்தி,
- ஆறு ஆதாரங்களில் நிறுத்தி,
- யோகநெறியில் மேலாய் விளங்கும் சாதனை செய்தேனோ?

அதுவும் இல்லை.

இவற்றை எல்லாம் விட்ட நான், ஒரு வறிய குடும்பஸ்தன் ஆகி, செல்வத்தைத் தேடிச் சேர்ப்பதை விட்டு, செலவு மட்டும் செய்யும் புத்தி உடையவனாய் இருக்கிறேன்.

இந்த அறிவு எதனால் வந்ததோ? (சரியை,கிரியை, யோகம்,ஞானம் என்னும் நான்கு நெறியிலும் புதிதாக ஏதும் செய்யாமலும்,பழைய

புண்ணியத்தை எடுத்து செலவு செய்பவனாயும் இருந்து விட்டதாக வருந்துகிறார் தாயுமானவர்.)

தாயுமானவரின் வருத்தத்தை போக்க வழி சொல்கிறது வேதாத்திரியம்.

"இயல்பறிதல்" வேண்டும் என்பதை சொல்கிறது வேதாத்திரியம்.

"சுகதுக்கம் அனுபவித்தேன், சோர்வு கண்டேன்
சுய அறிவால் ஆராய்ந்தேன், முடிவுகாண
சுகதுக்கம் உடலியங்கும் அறிவில் கண்டேன்
சூட்சுமமாய் மனங்குவித்து, ஒடுங்கிநின்று
சுகதுக்கம் கடந்துமோன நிலையுணர்ந்தேன்
சொரூபத்தில் அரூபநிலை யறிந்துவிட்டேன்
சுகதுக்கச் சுழல்தாண்ட முறை கேட்போருக்குச்
சொற்குறிப்பால் "கட+உள்" என்று சுருக்கிச் சொல்வேன்."
(ஞாக.பா.713)

சுகம் என்பதையும் துக்கம் என்பதையும் அனுபவித்தேன். இன்பம் துன்பம் என மாற்றி மாற்றி அனுபவித்ததில் சோர்வுதான் ஏற்பட்டது.

சுகம், துக்கம் என்பது என்ன? எவ்வாறு ஏற்படுகிறது என்பதை சுய சிந்தனையின் மூலம் ஆராய்ச்சி செய்தேன்.

சுகம் என்பதும் துக்கம் என்பதும் இயங்கும் உடலின் அறிவில் கண்டேன்.

மனதை ஒருமுகப்படுத்தி, சூட்சுமமாய் அறிவில் ஒடுங்கி நின்று சுக துக்கம் என்ற உணர் நிலை கடந்த மௌனநிலையை உணர்ந்தேன்.

உருவமாக உள்ள உடலில் அரூப நிலையாகிய இருப்பை அறிவாக அறிந்து விட்டேன்.

இன்ப துன்பம் ஆகிய வாழ்க்கைச் சக்கரத்தைத் தாண்டுவதற்கான கடப்பதற்கான முறைகளைக் கேட்பவர்களுக்கு, “கட + உள்” என்று சொற்குறிப்பால் சுருக்கிச் சொல்வேன்

மனம் கடந்து உள்ளே, அகநோக்கி அறிவு என்னும் நிலைக்கு செல்வது உள்கடக்கும் செயலாகும்.

அதனைச் செய்தால் இன்ப துன்பத்தின் இயல்பும் முடிவும் அறிவிற்குத் தெளிவாகும்.

இந்தத் தெளிவால் யோக மார்க்கத்தில் எளிதாக பயணிக்கலாமே.

## 5. கருணை காட்ட மாட்டாயோ?

நல்லவர்களை காண்பதும் நல்லதே, நல்லவர்கள் சொல்லும் பயன் நிறைந்த சொற்களை கேட்பதும் நல்லதே, நல்லவர்களின் உயர்ந்த குணங்களை பிறரிடம் சொல்வதும் நல்லதே, அத்தகைய நல்லவர்களோடு சேர்ந்து இருப்பதும் நல்லதே தான்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று” (ஔவையார்)

தீயவர்களைக் காண்பதும் தீமையே, தீயவர்கள் சொல்லும் நன்மையற்ற சொற்களைக் கேட்பதும் தீமையே, தீயவர்களின் கீழ்மையான குணங்களை பிறரிடம் சொல்வதும் தீமையே, அத்தகைய தீயவர்களோடு சேர்ந்து இருப்பதும் தீமையே செய்யும்.

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே – தீயார்

குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. (ஔவையார்)

நல்லவர்களின் சத்சங்கமும், ஈசனின் பூசையும், அதன் பயனாக நாம் பெறும் ஞானமும்தான் நிலையான பேரின்பமாகும்;

மனைவி-மக்களும், சுற்றமும், நம் எழிலுடம்பும் உட்பட மற்றவையெல்லாம் நிரந்தரமற்றவையே என்கிறார் பட்டினத்தார்

நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி யேகம்பனே" (பட்டினத்தார்)

தாயுமானவர் பாடுகிறார் . . . . . .

பாடாது பாடிப் படித்து இல் அளவுஇல் சமயமும்
பஞ்சுபடு சொல்லன் இவனைப்
பார்மினோ பார்மினோ என்று சபை கூடவும்
பரமார்த்தம் இது என்னவே

ஆடாதும் ஆடிநெஞ் சுருகிநெக்கு ஆடவே
அமலமே ஏகமேஎம்
ஆதியே, ஜோதியே எங்குநிறை கடவுளே
அரசே எனக்கூவிநான்

வாடாது வாடும் என் முக வாட்டமும்கண்டு
வாடா எனக் கருணைநீ
வைத்திடா வண்ணமே சங்கேத மா இந்த
வன்மையை வளர்ப்பித்தது ஆர்?

தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே,
தேடரிய சத்து ஆகிஎன்

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே." (தா.பா.115)

பாடுவதற்கு உவமையில்லாத பாடல்களைப் பாடியும். அவை போன்றவற்றைப் படித்தும் வைத்துள்ள பல சமயத்தைச் சேர்ந்தோரும், "பஞ்சுபோல் வல்லமை இல்லாத சொற்களைப் பேசுகிறான்.

இவனைப் பாருங்கள் என்று கூவி அழைக்க, சபை கூடுவது போல மக்கள் கூடவும், "மேலான பொருள் இதுவே" என்று, வெளிமுகமாக ஆடாது, அகமுகமாக ஆடி, நெஞ்சு நெகிழந்து உருக,

"மலமற்ற பொருளே! நிற்கும் பொருளே! எமக்கு மூலமே! ஒளிப்பழம்பே! எங்கும்நிறைந்து விளங்கும் கடவுளே! அரசே! என்று கூவி அழைத்து,

புறத்தே வாடாது, அகத்தே வாடும் என் வாட்டத்தை முகத்தளவில் கண்டு, "என் அருகில்வாடா!" என அழைத்து, என்மீது இரக்கம் காட்டாதபடி தீய ஆலோசனை கூறி, உன்னிடம் இந்த அரக்கத்தனத்தை வளர்த்துவிட்டவர் யார்?

இந்த அரக்கத்தனத்தை ஒழிக்க என்ன செய்ய வேண்டும்? மனதுக்கு பயிற்சி தரவேண்டும். அகத்தவமும் அகத்தாய்வும் செய்ய வேதாத்திரியம் வழி காட்டுகிறது.

"மனவளக்கலை மன்றத்தில்' பயிற்சி எடுத்துப் பாருங்கள். கணக்குப் போட்டுப் பாருங்கள். 'மனவளக்கலை மன்றத்திற்கு' வந்ததால் என்னென்ன நன்மைகள் வந்தன?

சினிமாவுக்கு, கோயிலுக்குப் போனதால் என்னென்ன நன்மைகள் வந்தன? இரண்டு மாதங்கள் கழித்து மனதுக்கு, தெளிவோ, அமைதியோ, வெற்றியோ, மகிழ்வோ இருக்கிறது என்றால் அதைப் பின் பற்றி வாருங்கள்.

இல்லை, இதைவிட எனக்குக் கோயிலுக்குப் போனதனால், சினிமாவுக்குப் போனதனால் நன்றாக இருக்கிறது என்று சொன்னால், இன்னும் சில நாட்களுக்கு அதையே தொடருங்கள்.

ஆனால், 'மனவளக்கலை மன்றம்' மனிதனை மனிதன் ஆக்க வல்லது. மனதைத் திடப்படுத்த வல்லது.

மனது திடம் இல்லாததனால்தான் வாழ்க்கைச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை; தாங்கிக் கொள்ள முடியவில்லை; அதைப் போக்கிக் கொள்ள முடியவில்லை. அப்போதுதான் சினம் உண்டாகிறது. துன்பம் உண்டாகிறது.

மனதிலே நல்ல வலு இருக்குமேயானால் இதெல்லாம் தானாகவே போக்கி விட முடியும்.

உங்கள் கையில் ஏதேனும் பொருள் இருக்குமேயானால், அப்போது விருந்தினர் வந்துவிட்டால் அச்சமில்லை. 'உட்காருங்கள். இதைச் சாப்பிடுங்கள். அதைச் சாப்பிடுங்கள்' என்பீர்கள்.

உங்கள் கையில் பொருள் இல்லையானால் எப்படி இருக்கும்? சோர்வு இருக்கும். அதே போல,

மனம் வளமாக இருக்குமேயானால் ஏதேனும் புதிய சிக்கல்கள் தோன்றும்போது அதைச் சோர்வு இல்லாது தாங்கிக் கொள்ளலாம்.

வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் எதையெடுத்தாலும் போக்கிவிட முடியும் என்று நினைக்காதீர்கள்.

அல்லது பிறருடைய வாழ்க்கைச் சிக்கல்களை நாம் போக்கிவிட முடியும் என்ற அகம்பாவமும் யாருக்கும் வேண்டாம்.

அவரவர்களே போக்கிக் கொண்டால் தான் முடியும். அதற்கு மற்றவர்கள் உதவி செய்ய முடியும்; ஒத்துழைக்க முடியும்.

ஒரு கிணற்றுக்கு, இன்னொரு கிணற்றிலிருந்து குழாய் மூலம் நீரைச் செலுத்தி நிரப்ப இயலாது; அந்தக் கிணறு நிறையாது.

அதனுடைய தன் ஊற்று வந்தால்தான் எப்போதுமே கிணறு நிரம்பும். ஒருவருக்கு ஏதோ ஒரு சிரமம் இருக்கிறது. பத்து ரூபாய் கொடுத்தோம். அந்தச் சிரமம் போய்விட்டது என்பது இல்லை.

இன்றைக்குப் பத்து ரூபாய் கொடுத்தோம் என்றால் நாளைக்கு இருப்பது ரூபாய் கொடுக்க வேண்டிய நிலைவரும்.

ஒவ்வொருவருடைய உள்ளமும் ஒரு பெரிய சுரங்கம். அறிவாலும், ஆற்றலாலும் அதை வளர்க்க வேண்டும். அதைத் தான் 'மனவளக்கலை மன்றம்' செய்கிறது.

உடலாலும் மனதாலும் மனிதனை மேல் நோக்கி வரச் செய்ய அவர்கள் செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் வழிப்படுத்தி வாழ வைக்கத் தேவையானப் பயிற்சிகளை அளிக்கிறது மனவளக்கலை மன்றங்கள்.

வாருங்கள் மனவளக்கலை மன்றங்கள் நோக்கி....ஆனந்தமாக வாழலாம்.

## 6. அறிவறிய வேண்டு மெனில்

சுத்தவெளிதான் இறைநிலை. இதுவே தான் கடவுள் ஆகும். இறைநிலையானது எல்லாம் வல்ல பூரணப் பொருள்.

இதன் இயல்பான தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் அதற்குள்ளாகவே செறிவு ஏற்பட்டு மடிப்புகள் விழுந்து, அதன் சூந்தழுத்தும் ஆற்றலாலேயே மிக விரைவான தற்சுழற்சி பெற்ற நுண்துகள்தான் முதல்நிலை விண் எனும் பரமாணு.

இந்த நுண்ணணுக்களின் கூட்டங்களே பேரியக்க மண்டலத்தில் காணும் அனைத்துத் தோற்றங்களும் ஆகும்.

முதல் நிலை விண்களின் விரைவான தற்சுழற்சியானது அதைச் சுற்றியுள்ள தின்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலான இறைவெளியோடு உரசும் போது எழுகின்ற நுண் அலைகள் தான் காந்தம் எனும் நிழல் விண்கள்.

நிழல் விண்கள் இறைவெளியின் சூழ்ந்தழுத்தத்தைத் தாங்க முடியாமல் கரைந்து போகும் நிகழ்ச்சிகள் தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்பனவாகும்.

இறைவெளியானது முதல்விண், நிழல்விண், காந்தம், காந்தத் தன் மாற்ற நிலைகளான அழுத்தம் முதல் மனம் வரையிலான ஆறுவகை,

இவற்றை மனதில் பதியவைத்துக் கொண்டு பிரபஞ்சத்தை எண்ணிப் பார்த்தால், ஆராய்ந்தால் பேரியக்க மண்டல தோற்றம் இயக்கம் விளைவுகள் அனைத்தும் விளங்கிவிடும்.

பரமாணு முதல் கொண்டு, எந்தப் பொருளும் இறைநிலையாகவே இருக்கும் காட்சி அறிவிற்கு உண்டாகும்.

எல்லா இடங்களிலும் எக்காலத்திலும் எல்லாப பொருட்களிலும் இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம் எனப்படுகின்றது.

பிரியாத தண்ணருள் சிவஞானி யாய்வந்து
  பேசரிய வாசியாலே
 பேரின்ப உண்மையை அளித்தனை, என் மனது அறப்
பேரம்ப லக்கடவுளாய்

அறிவாய் இருந்திடும் நாதவொலி காட்டியே
  அமிர்தப்ர வாகசித்தி
 அருளினை. அலாது திரு அம்பலமும் ஆகினனை
  ஆண்டனை. பின் எய்திநெறியாய்க்

குறிதான் அளித்தனை. நல் மரஉரிகொள் அந்தணக்
    கோலமாய் அசபாநலம்
 கூறினபின் மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
    கூட்டினை. எலாம் இருக்கச்

சிறியேன் மயங்கிமிக அறிவின்மை ஆவனோ?
    தேடரிய சத்தாகி என்
 சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
    தேசோ மயானந்தமே." (தா.பா.116)

விட்டு நீங்காத, குளிர்ந்த, திருவருள் பெற்ற சிவஞானியாக எழுந்தருளி, சொல்ல அருமை உடைய வாசி யோகத்தால் பேரின்ப உண்மையைக் காட்டிக் கொடுத்தாய்!

என் மனம் இறந்துபடுமாறு, பேரம்பலக் கடவுளாய், அறிவு சொரூபமாய் இருந்து நாத ஒலி கேட்பித்து, அருள் அமுதாமாகிய வெள்ளப் பெருக்கினை நுகரும் சித்தியை அருளிச்செய்தாய்.

அதுவன்றி, திருஅம்பலமாக நின்று, என்னை ஆட்கொண்டாய். அதன்பின் எனக்கென ஓர் இலக்கினையும் வரையறை செய்தாய்.

நல்ல மரப்பட்டையை ஆடையாக உடுத்து, அந்தணக் கோலத்தில் வந்து, செபிக்காமல் செபிக்கும் அசபா மந்திரத்தின் பெருமையையும் கூறிப் பிறகு சும்மா இருக்கும் ஒரு நெறியையயும் கூட்டுவித்து அருள் செய்தாய்.

இவை அனைத்தும் பெற்றிருக்கச் சிறியேன் அறிவு மிக மயங்கி அறிவில்லாத பேதை ஆவனோ?

அறிவில்லாத பேதை ஆன தாயுமானவருக்கு வழி காட்டுகிறது வேதாத்திரியம். இறைநிலையுணர்ந்த அறிவு வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

பேரியக்க மண்டலத் தோற்றங்கள் அனைத்திலும் சிறந்ததோர் தெய்வீகக் கருவூலம் மனிதப் பிறப்பு. பிரம்மம் என்பதே தெய்வம் எனப் போற்றப்படுகிறது.

அதுவேதான் இறைவெளியாக எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சுத்தவெளியாகும். இதுவே எல்லாம் வல்ல பேராற்றலாகும்.

இது எல்லையற்ற விரிவு நிலையுடையதாக இருப்பதால் புலன்களுக்கு எட்டாத ஒன்றாக உள்ளது.

இது விரைவு, பருமன், காலம், தூரம் எனும் நான்கு கணக்குகளுக்கு உட்படாதது. இம் மாபெரும் ஆற்றலிலிருந்து தான் பரமாணுவெனும் நுண்ணியக்கத் துகள் தோன்றியது.

பரமாணுக்கள் பல இணைந்து அணுவாகவும், அணுக்கள் பல இணைந்து பேரணு, செல்கள், பல உருவத் தோற்றங்கள், வானுலவும் கோள்கள், உலகம் மீது வாழும் ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரையில் தொடரியக்கமான பரிணாமம் தான் பிரம்மம் எனும் தெய்வீகப் பேராற்றலின் சரித்திரம்.

மனிதன் என்ற தோற்றமே, பிரம்மத்தின் ஆதி நிலையாகவுள்ள இறைவெளி முதற் பொருளாகவும், ஆறறிவு கொண்ட மனித மனமே இறுதியாகவும் உள்ளது.

ஆதி முதல் அந்தம் வரையில் அனைத்தையும் இணைத்து ஒரே அகக்காட்சியாகக் காணக் கூடிய பேரறிவுதான் பிரம்ம ஞானம் ஆகும்.

இத்தகைய அறிவு தான் இறை நிலையுணர்ந்த அறிவு. அதுவே தன் முடிவு நிலையான மனதின் ஊடுள்ள உட்பொருளான அறிவாகவும், அவ்வறிவுதான் தானாகவும் இருக்கும் முழுமை நிலையுணர்ந்த தெளிவே பிரம்ம ஞானம் ஆகும்.

## பிரம்ம வித்தை:

“வித்தை என்றால் பிரம்ம வித்தை உயர்வதாகும்
   வேதாந்தம் பேசுவதால் கிட்டிடாது
அத்து விதமாகி அவன் எங்கு மாகி
   அணு முதலாய் அண்டங்களாகித் தாங்கும்
சுத்த வெளி சூனியமாய், நிறைந்த தன்மை
   சூட்சுமமாய் அனுபவமாய், அறிந்து நிற்கும்
தத்துவத்தின் முடிவான தானேயான
   தனை யறிந்த வித்தை அது தர்க்கம் வேண்டாம்”.(ஞாக.பா.1389)

இறைநிலையை பிரம்மம் என்று சொல்லுவார்கள். பிரஹ் என்ற சம்ஸ்கிருத வார்த்தைக்குப் பெருகுதல் என்ற பொருள் உண்டு.

அம் என்றால் இறைநிலை. ப்ரஹ் + அம் = பிரஹ்மம் = பிரம்மம். இறைநிலை எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து, பிரபஞ்ச தோற்றங்களாகப் பெருகிக் கொண்டேயுள்ளது.

வித்துதல் என்றால் பரவுதல் என்ற பொருள் ஆகும். பிரபஞ்சத் தோற்றம் இயக்கம் விளைவு பற்றியும் அவற்றிற்கு மூலமாக ஆதியாக இருக்கும் பிரம்மத்தைப் பற்றியும் கூறுவது வேதங்கள் ஆகும்.

வேதங்fளில் கூறப்பட்டவைகளைத் தெரிந்து கொண்டு வார்த்தைகளால் அதனைப் பற்றி பேசுவதால் பிரம்ம ஞானத்தை அடைய முடியாது. அறிவை உயர்த்தி விரித்து ஆத்மானுபவமாக உணரத்தான் முடியும்.

இரண்டற்ற இறைநிலையானது தன்நிலையில் மாற்றம் பெற்று இயக்கத்திற்கு வந்து விண் ஆகியது.

அணு முதல் பிரபஞ்சம் வரை அனைத்தையும் தன்னுள்ளாகவே தாங்கிக் கொண்டும் உள்ளது.

இறைநிலை சுத்தவெளி, சூன்யம், அது இல்லாத இடமோ, பொருளோ, இயக்கமோ, விளைவோ இல்லை.

ஆகவே அது நமது உடலாக, உயிராக, அறிவாக உள்ளது. இயக்குவது அறிவு. இயங்குவது உயிர். உணர்வது மனம்.

மன அலையைக் கொண்டே சென்றால் அறிவு என்ற நிலையில் சூட்சுமமான அனுபவமாக, எல்லாவற்றையும் அறியக்கூடிய, தத்துவங்களுக்கெல்லாம் முடிவான இறைநிலையே தானுமாகின்ற, தன்னை அறியக்கூடிய வித்தை தான் பிரம்மவித்தை.

தர்க்கத்தால் உணர முடியாது. சிற்றிவைப் பேரறிவோடு லயமாக்குகின்ற ஆத்மானுபவம் ஆகும்.

## அறிவின் நான்கு நிலைகள் :

"அறிவறிய வேண்டு மெனில் புலன் கடந்து
அறிந்துள்ள அத்தனையும் கடந்து நின்று
அறிவிற்கு இயக்ககளப் பொருள் பரம
அணுவான உயிர்நிலையை உணர வேண்டும்;
அறிவங்கே உயிராகும் துரியமாகும்.
அந்நிலையும் கடந்துவிடத் துரியாதீதம்,
அறிவிந்த நான்கு நிலைகளில் அவ்வப்போ
அனுபவமாய் நின்று நின்று பழக வெற்றி". (ஞாக.பா.1196)

இறைநிலையுணர்ந்த அறிவு வேண்டும் என்கிறது வேதாத்திரியம். அந்த இறைநிலையுணர்ந்த அறிவில் தெளிவு பெற்று ஆனந்தமாக வாழ்வோமாக!

# 7.முழுமைப் பேறு அடையலாமே!

**நந்தவனத்தில் பூத்திருக்கும் ஒரு சிறிய பூ. காலையில் மலர்ந்து மாலையில் வாடிப்போகும் ஒரு சின்னஞ்சிறிய மலர்.**

**இது தான் மனித வாழ்க்கை. மலர் செடியில் பூத்து செடியிலேயே வாழ்ந்து, அங்கேயே வாடியும் விடலாம் அல்லது பறிக்கப்பட்டு மங்கையர்களின் கூந்தலை அழகும் படுத்தலாம்.**

**தலைவர்கள் கழுத்தில் மாலையாக விழலாம். இறந்து போனவர்களுக்கு இறுதி மரியாதையாகவும் மலர்கள் வரலாம்.**

**ஆனால், அந்த மலருக்கு அப்போதெல்லாம் கிடைக்காத சிறப்பு. அது தெய்வத்தின் சன்னதியில் மாலையாக அர்ச்சனை புஷ்பங்களாக வருகிற போது தான் சிறப்படைகிறது.**

**மற்றவர்களால் வணங்கவும் படுகிறது. மனித வாழ்க்கையும் அப்படித்தான்.**

**விதி என்ற நதி வழி பயணம் செல்லுகிற நமது வாழ்க்கை பள்ளத்தில் தேங்கி நின்றாலும், சுழற்சியில் அகப்பட்டுக் கொண்டாலும் சமுத்திரத்தில் போய் கலந்துவிட்டாலும், பெரிய சிறப்பை கண்பது இல்லை.**

**நம்மை படைத்த பரம்பொருளை தேடி அதனை நோக்கி சரணாகதி அடையும் போது தான் வாழ்வின் நிஜ தத்துவம் பிரகாசம் அடைகிறது.**

“விதியை வெல்லவும் அதன் பிடியிலிருந்து விலகி நிற்கவும் இரு வழிகளே உண்டு.

ஆன்மா விதியால் கட்டுப்படுவதில்லை என அறிதல் ஒரு வழி. இறைவனிடம் முழுமையாகச் சரணாகதி அடைந்து நிற்பது மற்றொருவழி.” என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

இறைநிலையிடம் முழுவதுமாக சரணடைந்த நிலையில் இந்தப் பாடலை பாடுகிறார் தாயுமானவர்.

ஆர் ஆர் எனக்கு என்ன போதித்தும் என்ன?என்
    அறிவினை மயக்க வசமோ?
 அண்டகோ டிகள் எலாங் கர்ப்பஅறை போலவும்
    அடுக்கு அடுக்கா அமைத்துப்

பேராமல் நின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவது அலாது. அன்றினும்
பின்னம் உற மறவாது. நன்னயத் தால் இனிப்
பேரின்ப முத்திநிலையும்

தாராது தள்ளவும் போகாது, உனால் அது
தள்ளினும் போகேன் யான்,
தடைஏதும் இல்லை, ஆண்டவன் அடிமை என்னும்இரு
தன்மையிலும் என்வழக்குத்

தீராது, விடுவது இலை நடுவான கடவுளே
தேடரிய சத்து ஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே." (தா.பா.117)

- இனிமேல் யார் யார் வந்து என்ன என்ன போதித்தாலும், என் அறிவினில் மயக்கத்தை உண்டாக்க முடியாது.
- அண்டகோடிகள் அனைத்தையும் கருப்பை போன்ற ஆகாயத்தில் அடுக்கடுக்காய் இருக்குமாறு செய்து, அசையாது நின்ற பரவெளியில், எனது மனவெளியும் சிறந்து நிற்குமே அல்லாமல், வேற எதனோடும் ஓர் அழிவு உண்டாகுமாறு பொருந்தாது. நல்ல விருப்பத்தால் இனிப் பேரின்ப முக்தி நிலை தராது, ஒதுக்கிவிடவும் முடியாது.

அப்படி ஒருக்கால் ஒதுக்கிவிட்டாலும்., நான் பிரிந்து போகமாட்டேன். "நீ ஆண்டவன். நான் உன் அடிமை!" என்ற இந்த இரு தன்மைக்கு வரும் இடையூறு ஏதும் இல்லை. இந்த வழக்கம் மாறப்போவதில்லை. மாற நான் விடவும் மாட்டேன்.

தாயுமானவரைப் போல் நாமும் இறைநிலையுடன் ஒன்றி விடலாம். சரணாகதி அடைந்து ஒன்றி விடலாம். முழுமைப் பேறு அடையாலாம். வேதாத்திரியம் விடை சொல்கிறது.

நிறைவடைந்த குருமூலம் நேர்முகமாய்க்
குண்டலினி யோகம் கற்று.
நித்ததவம் ஆழ்ந்தாற்றி, உண்மை
உணரப்பெற்றால் முனைப்பு போகும்.

இறைவனது பகுதிநிலை உயிர் மனமாய்த்
தேர்ந்து, அதன் உறைவிடமாம்
உடலதுவோ சமுதாயம் உற்பத்தி
செய்து பல பொருட்கள் ஈந்து,

முறையாக வளர்த்து பண்பாட் டுடனே
கல்வி தொழில் காப்பு தந்த
முழுக்கதையும், சிந்தனையின் முதிர்ச்சி யினால்
உணர்ந்து, வினைப் பதிவாய்ப் பெற்ற

கறைநீங்க, உயிரதனை இறை நிலைக்கும்
கனஉடலைச் சமூகத்திற்கும்
கனிவுடனே அர்ப்பணிக்கும் தகைமை
வரும். இந்நிலைஆய முழுமைப்பேறாம்!" (ஞாக.பா.1497)

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்கின்ற தான், தனது என்ற தன்முனைப்பால், தனது சுயம் தெய்வீகம் என்பதையும், இறையிலையின் ஒரு பகுதியாகத தான் உள்ளதையும் மறந்து. துன்புற்று வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

தன்ன அறிந்து. இறைநிலையை உணர்ந்து. தன்னிறைவடைந்து அருட்குருவிடம் நேரடியாக உயிர் மேல் மனம் செலுத்துகிற குண்டலினி யோகம் கற்றுக் கொள்ளுங்கள்.

நாள்தோறும் தவம் செய்துவந்தால் உண்மை உணரப்பெற்ற இறை முனைப்பு மலர்ச்சி பெற்று தன்முனைப்பானது ஒழிந்துவிடும்.

இறைநிலையின் ஒரு பகுதியான உயிரை, மனமாகத் தெரிந்து கொண்டு, அதன் வசிப்பிடமாகிய உடலை, பல வாழ்வியல் தேவைப்

பொருட்களை உற்பத்தி செய்து, சமுதாயம் கொடுத்து வளர்த்துள்ளது என்ற உண்மை விளங்கும்.

உடலை முறையாக வளர்த்தது போலவே கல்வி, தொழில், காப்பு ஆகியவற்றையும் கொடுத்து மனிதப் பண்பாகிய இட்டுண்டு, ஒத்தும் உதவியும் வாழக்கூடிய அறிவையும் சமுதாயம் கொடுத்துள்ளது என்பதையும் - சிந்தனை ஆற்றலின் முதிர்ச்சியினால் தமது முழுக் கதையையும் விளங்கிக் கொள்ளலாம்.

உண்மைகளை மறந்து பல பிறவிகளிலும் வினைப்பதிவுகளால் களங்கமுற்றுள்ள ஆன்மக்கறைகளை நீக்கிக்கொள்ள, சமுதாயம் தந்த பரு உடலை சமுதாயத்திற்கும், இறைநிலையின் பகுதியான உயிரை இறைநிலைக்கே கனிவுடன் அர்ப்பணிக்கின்ற சிறப்பு-இயல்பாகவே மனிதனில் மலர்ச்சியுறும்.

இந்நிலை கைவரப் பெறுவதுதான் முழுமைப்பேறு ஆகும். மனிதன் அடைய வேண்டிய பெரும்பேறு இதுவேயாகும்.

## 8. சிந்தையை அடக்கியே

## சும்மா இருக்கின்ற திறமரிது

மனம் தான் மனிதவாழ்வின் விளை நிலம். அதை செம்மையாக வைத்துக் கொண்டால் வாழ்வு வளம் பெறும்.

மனதை அடக்க நினைத்தால் அலையும். அதை அறிய நினைத்தால் அடங்கும். தவறு செய்வதும் மனம் தான். இனி தவறு செய்யக்கூடாது என்று தீர்மானிப்பதும் மனம்தான்.

அன்றாடம் மனம் பலவிதமான விஷயங்களில் அலையவிட்டு தடுமாற்றம் பெறுகிறது. குறிப்பிட்ட நேரம் தியானம் செய்து மனதை தூய்மைப்படுத்தினால் மனநலம் மேம்பாடு அடையும்.

உலகில் பல செயல்கள் செய்து வெற்றி பெறலாம். ஆனால் இந்த மனதை அடக்கி சும்மா இருப்பது மட்டும் கடினம் என்று இந்த பாடலில் தாயுமானவர் சொல்கிறார்.

கந்து உக மதக்கரியை வசமா நடத்தலாம்.
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒருசிங்கம் முதுகின் மேல் கொள்ளலாம்
கண்செவி எடுத்து ஆட்டலாம்.

வெந்தழலின் இரதம் வைத்து ஐந்துலோ கத்தையும்
வேதித்து விற்று உண்ணலாம்.
வேறு ஒருவர் காணாமல் உலகத்து உலாவலாம்.
விண்ணவரை ஏவல்கொளலாம்.

சந்ததமும் இளமையோடு இருக்கலாம். மற்று ஒரு
சரீரத்தினும் புகுதலாம்.
ஜலமேல் நடக்கலாம் கனல் மேல் இருக்கலாம்
தன் நிகர் .இல் சித்திபெறலாம்.

சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.” (தா.பா.118)

- கட்டுத்தறியை முறிக்கும் அளவு வலிமை உடைய மத யானையை, நம் ஏவல் கேட்டு நடக்குமாறு செய்யலாம்.
- கரடி, கொடிய புலி ஆகிய இவற்றின் வாயைக் கட்டி விடலாம். ஒப்பற்ற சிங்கம் ஒன்றின் முதுகில் ஏறிப் பயணிக்கலாம்.
- பாம்பினை எடுத்து ஆட்டலாம்.
- வெப்பத்தை உமிழும் நெருப்பில் பாதரசத்தை வைத்து கீழான ஐந்து உலோகங்களை வேற்று நிலையாக்கி. மேலான உலோகமான தங்கமாக மாற்றி, அதனை விற்று, அந்த வருவாயில் உணவு உண்டு உயிர் வாழலாம்.

- மற்றவர் கண்களுக்குப் புலப்படாவண்ணம் இந்த உலகில் ஒளிந்து உலாவரலாம்.
- தேவர்களை அடிமைப் படுத்தி, நாம் இடும் கட்டளையை அவர்கள் ஏற்று நடக்குமாறு செய்யலாம்.
- எப்பொழுதும் இளமை மாறாமல் இருக்கலாம்.
- மற்றவர் உடம்பில் நம்முடைய உயிரைப் புகச் செய்யலாம்
- நீர்மீது நடக்கலாம்.
- நெருப்பின் நடுவில் இருக்கலாம். இப்படி ஒப்பில்லாத பல பேறுகளைப் பெறலாம்.

ஆனால் நம்முடைய மனதை அடக்கி, ஓரிடத்தில் சிவனே என்று இருப்பது மிகவும்அரிது.

மனதை அடக்க வழி உண்டு என்ற வழி காட்டுகிறது வேதாத்திரியம். எப்படி?

### மனம் என்பது என்ன?

மனம் எண்ணங்களை கொண்டது. காந்த அலைதான் மனமாக செயல்படுகிறது. ஒரு மனிதனின் அறிவு என்பது – அவன் வாழ்வில் ஏற்படுகின்ற அனுபவம். நெருப்பு சுடும் என்று ஒரு அனுபவம் ஏற்படுகிறது.

அந்த அறிவு நம் மனதில் பதிகிறது (□□□□□□□□). மறுமுறை நெருப்பை பார்த்ததும் சுடும் என்ற அறிவு நினைவிற்கு வருகிறது.

நாம் பிறந்ததில் இருந்து இப்போது வரை நமது மூளைக்குள் போடப்பட்ட பல விஷயங்களை பொறுத்தே நமது சிந்தனை அமைகிறது.

ஒரு மனிதனின் சிந்தனை அவனுக்கு கிடைக்கும் செய்திகள் (□□□□/□□□□□□□□□□□) பொறுத்தே அமைகிறது.

## மனதின் நிலைகள்:

மூளையிலிருந்து மெல்லிய மின் வீச்சுகள் வெளிபடுகின்றன. இதை Electroelectroencephalogram (EEG) என்ற கருவி மூலம் அளவிட முடியும்.

இந்த மின் வீச்சுக்களின் வேகம் அவ்வபொழுது நமது மூளையின் செயல்பாட்டை பொருத்து மாறக்கூடியது. இது வினாடிக்கு இத்தனை □□□□□□ என்று கணக்கிடப்படுகிறது.

கீழ்க்கண்டவாறு நான்கு நிலைகளாக பிரிக்கப்படுகிறது.

1.பீட்டா நிலை
2.ஆல்ஃபா நிலை
3.தீட்டா நிலை
4.டெல்டா நிலை

## 1. பீட்டா நிலை:

வினாடிக்கு 14 சைக்கிள்களுக்கு மேல். நாம் விழித்திருக்கும் நேரத்தில் மூளையின் செயல்பாடு பீட்டா அளவில் இருக்கும்.

## 2. ஆல்ஃபா நிலை

வினாடிக்கு 7 முதல் 14 சைக்கிள் வரை. தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடைப்பட்ட நிலை.

## 3. தீட்டா நிலை

வினாடிக்கு 4 முதல் 7 சைக்கிள் வரை. நாம் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் நிலை.

## 4. டெல்டா நிலை

வினாடிக்கு 0 முதல் 4 சைக்கிள் வரை. மிகவும் ஆழமான நிலை.

"ஆதியெனும் பிரம்மம் அறிவு. அது கடல்போல் ஒன்று.
அதிலிருந்து எழும் அலைகள் மனம் எண்ணங்கள்
பேதமுடன் அலைகளது விரிந்த போதும்,
பிரியாது கடலைவிட்டு. கடல் ஒன்றேனும்
வாதமிடம் பலகோடி அலைகள் ஊடும்
வழுவாது உள்நிறைந்து நின்று முடிவில் தன்னுள்
நீதமுடன் ஐக்கியங்கொள் தன்மை போல,
நிலையில்லா மனம் அறிவில் ஒடுங்கிப் போகும்." (ஞாக.பா.1178)

## மனச்சங்கிலி

நாம் அனைவரும் கோவிலில் யானையை பார்த்திருப்போம். அதன் காலில் ஒரு சங்கிலி கட்டபட்டிருக்கும். பாகன் கையில் ஒரு கம்பை வைத்து குத்தி அடக்கி வைத்திருப்பான்.

யானை மனிதனை விட பல மடங்கு பலம் வாய்ந்தது. ஆனால் சிறிய பாகனுக்கு பயந்து கட்டுப்பட்டு நடக்கிறது. அவன் சொன்னால் ஆசீர்வாதம் கொடுக்கிறது.

உண்மையில் யானையை கட்டுபடுத்துவது அதன் ஆழ் மனதில் பதிந்த எண்ணம். யானை சிறுவயதில் இருக்கும் போதே பாகன் சங்கிலியால் கட்டி வைத்து கட்டுபடுத்துகிறான்.

யானை சங்கிலியை உடைக்க முயன்று முடியாமல் முயற்சியை கை விட்டிருக்கும். இப்போது அது வளர்ந்து பெரிய யானையாக இருக்கும். ஆனால் அது சங்கிலியை உடைக்க இப்போது முயற்சி செய்யாது.

நீங்கள் உற்று நோக்கினால் அவ்வப்பொழுது தன் கால்களை அசைக்கும் யானை சங்கிலி கட்டிருக்கும் காலை அசைப்பது இல்லை.

சங்கிலிக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற எண்ணம் யானையின் ஆழ்மனதில் நன்கு பதிந்துவிட்டது. அதனால் தான் கட்டுப்பட்டு நிற்கிறது.

யானைய போல நம்மில் பலபேர் நிறைய மன சங்கிலிகளை கட்டிகொண்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு எனக்கு கணக்கு வராது, அது ரொம்ப கஷ்டம், அது என்னால் செய்ய முடியாது முதலியன.

இந்த சங்கிலிகளை நாம் உடைத்து எறிய வேண்டும். தியானம் பழகினால் இந்த சங்கிலிகளை உடைத்து எரிந்து விடலாம்.

நாம் தியானம் செய்யும் போது எண்ணங்களின் வேகம் குறைந்து மனம் பீட்டா நிலையில் இருந்து ஆல்ஃபா நிலைக்கு வருகிறது.

நமது ஆழ்மனம் திறக்கப      டுகிறது. இந்த ஆல்ஃபா நிலைதான் முன்னோர்கள் கூறும் துரிய நிலை ஆகும்.

தியானம்– ஆழ் மனதை திறக்கும் அற்புத சாவி.

“ஆரோக்கிய வாழ்வுக்கு, யோகமும் தியானமும் அவசியம். நிலையில்லா மனம் அறிவில ஒடுங்கிப் போகும் என்பது வேதாத்திரியம்.

# 9. மரணமில்லா நிலை

**மரண பயம்** (□□□□□ □□□□□□) – என்பது எண்ணற்ற அநாவசியமான துயரங்களுக்கு காரணமாகிறது. இதனால் மனித ஆரோக்கியமும் மன அமைதியும் பறிபோகிறது.

**மரண** பயத்தின் கொடூரக் கரங்களில் சிக்கிக் கொண்ட யாவரும் உயிரோட்டமான சமுதாய வாழ்க்கையிலிருந்து தங்களைத் துண்டித்துக் கொள்கிறார்கள்.

**மரணம்** என்பது மனித வாழ்க்கையின் இயற்கையான ஒரு பகுதி.

மௌன குருவால் சின்முத்திரை காட்டி ஆட்கொள்ளப்பட்ட தாயுமானவர், எருமைக் கடாமீது எமனாக வந்த மிரட்டலாமா? என்று கேட்கிறார் இப்பாடலில்.

எல்லாம் அறிந்தவரும் ஏதுமறி யாதவரும்
 இல்லையெனும் இவ்வுலகமீது
ஏதும் அறியாதவன் எனப்பெயர் தரித்து மிக
 ஏழைக்குள் ஏழையாகிக்,

கல்லாத அறிவில் கடைப்பட்ட நான், அன்று
 கையினால் உண்மை ஞானம்
கற்பித்த நின் அருளின் உனக்கு என்ன கைம்மாறு
 காட்டுவேன் குற்றேவல்நான்.

அல் ஆர்ந்த மேனியொடு குண்டுகண், பிறைஎயிற்று,
 ஆபாச வடிவம் ஆன
அந்தகா! நீஒரு பகட்டால் பகட்டுவது
 அடாது அடா, காசு நம்பால்

செல்லா தடாஎன்று பேசுவா யதுதந்த
 செல்வமே சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
 தேசோ மயானந்தமே.” (தா.பா.119)

எல்லாம் அறிந்தவரும், ஏது ஒன்றும் அறியாதவரும், இல்லை” என்று சொல்லப்படும், இவ்வலகின்மீது, ஒன்றும் அறியாதவன்” என்று பெயர் தாங்கி,

மிகவும் அறிவில்லாதவனுக்கும் கீழ்ப்பட்ட அறிவிலாத வனாகி, கல்வி கல்லாது, அறிவில் கடைப்பட்டு நின்ற நான்,

அன்று சின்முத்திரை காட்டிக் கையினால் திருவடி ஞானம் கற்பித்த நினது திருவருளுக்கு என்ன கைம்மாறு (பிரதி உபகாரம்) செய்யப் போகிறன்?

கரியநிற உடம்பும், குழிவிழுந்த கண்களும், சந்திரப் பிறை போல் வளைந்த பற்களும் கொண்ட அருவருக்கத்தக்க தோற்றமுடைய எமதூதனே!

நீ ஓர் எருமைக் கடாவின் மீதேறி வந்து, மிரட்டுவது தகாத செயலடா!

மரணத்தை மறவாதே" என்பது வேதாத்திரியம். பிறப்பு இறப்பு என்பது இயற்கை தானே. இருந்தாலும் மரணமில்லவா நிலை பெறலாமே என்கிறது வேதாத்திரியம்.

"இறப்பதற்கே பிறக்கின்றோம் எனினும், அந்நாள்
எண்ணத்திற்கெட்டு மட்டும் இந்த உண்மை
மறக்காமல் மற்றவர்க்குத் தீங்கு இன்றி
மண்மீது உழைத்துண்டு அன்பாய் வாழ்வோம்" (ஞாக.பா.1307)

உடலும் உயிரும் இணக்கத்துடன் செயல்படுவது வாழ்வு எனப்படும். உடல் இயங்க உயிர் அவசியம்.

இயக்கமற்ற உடல் சடம், பிணம் ஆகும். உயிர் தனியாக உடல் இன்றி இயங்காது. உடலும் உயிரும் பிரிவுற்றால் அந்நிகழ்ச்சியை மரணம் என்றும் இறப்பு என்றும் கூறுகிறோம்.

நில உலகில் பிறந்தவர்கள் அனைரும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் இறந்தே ஆக வேண்டும். இதுவே இயற்கை நியதியும் ஆகும்.

தோற்றம் என்ற ஒன்று ஏற்பட்டால் மாற்றங்களுக்கு பின் மறைவதும் இயற்கையே.

ஆகவே இறந்து போதற்காகவே பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இருப்பினும் மரணம் வருகின்ற நாள் சிந்தனையில் உதிக்கும் வரை இந்த உண்மையினை மறவாமல், மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில், நில உலகில் உழைத்து உண்டு பிறரிடம் அன்பு பாராட்டி வாழ்வோம்.

## மரணமில்லா நிலை

"மனம் புலன் உணர்வினில் மயங்கிட மாயை ஆம்.
மனம் உயர் வெளியினில் மருவித் தோய்ந்திட!
மனம் விரிந்த அறிவெனும் மாபதம் எங்திடும்!
மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே."

மனம் மாய் என்பார்கள் மனநிலை மாற்றத்தை
மனம் மாய்வதே இல்லை, மனம் மெய்ப் பொருளாகி
மனமே அறிவாக மறு பிறப்பு எய்திடும்
மனம் அறிவான பின் மரணமில்லா நிலை.

மனமது இயற்கையதன் மாபெரும் நிதியலோ
மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே
மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்.
மனத்திலே உள எல்லாம் மற்றெங்கு தேடுவீர்? (ஞாக.பா.1176)

பல கோடிப் பறிவிகளிலும், பழகிக் கொண்ட பழக்கத்தால் மனிதன் தன் அறிவில், உடல் அளவில் மனதை எல்லை கட்டிக் கொண்டு புலன் உணர்வில் மயங்கிய நிலையில், உண்மைக்கு மாறான முறையில் வாழ்வது மன மயக்கமா கிய மா யையின் காரணமாகும்.

மனமானது தனது எல்லை கட்டியுள்ள தளைகளைத் தகர்த்து மனதை உயிரில் ஒடுக்கி. அறிவு என்ற நிலையில் விரிவடையும் போது, உயர்வான தெய்வீக நிலை கைவல்யமாகும்.

மனம் அறிவு என்ற நிலையில் இயங்கும்போது, அவனில் அடங்கியுள்ள தெய்வீகத் தன்மைகள் வெளிப்படும்.

மனம் அடங்காது, மனதை அடக்க நினைத்தால் அடங்காது. அறிய நினைக்க வேண்டும்.

மனமானது விரிவடைந்தால் மெய்ப் பொருளாகி அறிவாக மறுபிறப்பை அடையும்.

மனம் அறிவாக இருந்து செயல்படுமேயானால் இறப்பும் இல்லை. பிறப்பும் இல்லை. அதுவே மரணமில்லா பெருவாழ்வு ஆகும்.

மனம் என்பது இயற்கை என்னும் இறைநிலையின் ஒரு பகுதியாக தெய்வீகப் பெரிய நிதியாக மனிதனுக்குக் கிட்டியுள்ள பெரும் பேறு ஆகும்.

மனம் உலகியல் சார்ந்த விஷயங்களில் தன்முனைப்போடு தாழ்வுறுமேயானால் மனிதன் துன்பத்தை அனுபவிக்கிறான்.

மனதை உயர்த்தி பிரித்து அறிவு என்ற நிலையில் இறை முனைப்பினால் இன்பம் அனுபவிக்கிறான்.

இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் ஆகிய அனைத்தும் மனித மனத்திலேயே உள்ளது. மனதை அறிய முற்படாமல் வேற எங்க தேடினாலும் எதையும் கண்டறிய முடியாது. மனதை அறிந்து உணர்ந்து ஆனந்தாக வாழ்வோமாக.

# 10. பெண்ணின் பெருமையை போற்றுவோம்.

மனமே! கொடிய கழுகுகள் பாய்ந்து பாய்ந்து சிறகுகளால் தட்டியும், மூடியும், உடம்பை சின்னபின்னம் ஆக்கியும், கூச்சலிட்டும், கொத்தியும் உண்பதைப் பார்த்து இருந்தும், ஒன்பது துளைகளுடன் கூடிய தோல் ஆன பையாகிய உடம்பின் மீது, ஒரு நாளைப்

போலவே, எல்லா நாளும் அன்பு வைத்து, அலைந்து திரிந்தாயே!" என்று வருத்தப்படுகிறார் பட்டினத்தார்.

"ஒன்பது வாய்த் தோல்பைக்கு ஒரு நாளைப் போலவே
அன்பு வைத்து நெஞ்சே அலைந்தாயே – வன்கழுக்கள்
தத்தித் தத்திச் சட்டை தட்டிக்கட்டிப் பிட்டுக்
கத்திக் கத்தித் தின்னக் கண்டு." (பட்.பா.183)

பட்டினத்தாரைப் போலவே, " மகளிர் பின்னே ஆசையால் என் போல் அலைந்தவர்கள் கற்றவர், கல்லாதவர் என இரு தரப்பிலும் எவரேனும் ஒருவர் உண்டோ?" என்று தாயுமானவர் இப்பாடலில் கேட்கிறார்.

"மின்போலும் இடைஒடியும் ஒடியும் என மொழிதல்போல்
மென்சிலம்பு ஒலிகள் ஆர்ப்ப.
வீங்கிப் புடைத்துவிழு சுமை அன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்ஆவலாய்

என்போல் அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்
இருவர்களில் ஒருவர் உண்டோ?
என்செய்கேன் அம்மம்ம! என்பாவம் என்கொடுமை
ஏது என்று எடுத்து மொழிவேன்,

அன்பால் வியந்து உருகி அடி அற்ற மரம் என்ன
அடியிலே வீழ்ந்துவீழ்ந்து, எம்
அடிகளே உமது அடிமை யாங்கள் எனும் நால்வருக்கு
அறம் ஆதி பொருள் உரைப்பத்

தென்பாலின் முகம் ஆகி வட ஆல் இருக்கின்ற
செல்வமே! சத்து ஆகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே." (தா.பா.120)

அன்பு மீதூர, வியந்து உருகி. அடியற்ற மரம்போல திருவடியிலே பலமுறை விழுந்து,

- “எம் கடவுளே!
- உமது அடிமைகள் நாங்கள்!” என்று கூறிய சனகர் முதலிய முனிவர்கள் நால்வருக்கும்,
- அறம் முதலிய உறுதிப் பொருள்கள் நான்கினையும் தென்முகக் கடவுளால் கல்லால மரத்தின்கீழ் இருந்து உபதேசித்த செல்வமே!
- தேடுதற்கு அரிய, நிலையான இருப்பாகி, எனது சித்தத்தில் குடிகொண்ட அறிவுமயமான கடவுளே! ஒளியாய் விளங்கும் பேரின்பமே!

மின்னல் போன்ற மெல்லிய இடை ஒடியும் ஒடியும்!” என்று சொல்வது போல மெல்லிய சிலம்பு ஆரவாரம் செய்ய, பருத்துப் பணைத்து, இற்றுவிழும் சுமையுடைய முலையுடன் கூடிய மகளிர் பின்னே ஆசையால் என் போல் அலைந்தவர்கள் கற்றவர். கல்லாதவர் என இரு தரப்பிலும் எவரேனும் ஒருவர் உண்டோ?

தாய்க் குலத்தைக் காமத்தீ மூட்டுகின்ற நிலையை இழிநிலை என்று வேதாத்திரியம் சாடுகிறது.

## பொருந்தாத வாதம்

“தாய்க்குலத்தைக் காமத்தீ மூட்டு கின்ற
    தனிமுறையில் வாணித்து, வாலிபத் தோர்
பேய்க்குணத்தை அடைவதற்கு வழி வகுத்துப்
    பிறமொழியை அரசினரை வெறுத்துச் சீறும்
நாய்க்குணத்தைப் பாமரர்க்கு ஏற் படுத்தி,
    நல்வாழ்வை நஞ்சாக்கும் நபர்கள், ஊரை
ஏய்ப்பதற்குப் பண்பாட்டைப் பற்றிப் பேசும்
    இழிநிலையைக் காண்கின்றோம். வருந்து கின்றோம்.”

(ஞாக.பா.544)

பெண்களை போகப் பொருளாக மட்டும் பார்க்கக் கூடாது என்றும் பெண் உரிமை வேண்டும் என்றும் பெண்ணின் பெருமையையும் வேதாத்திரியம் பேசுகிறது.

## பெண்உரிமை வேண்டும்

ஒரு ஆண்தன் பால்வேட்கைத் தீர்த்துக் கொள்ள,
உதவும்ஒரு கருவியாய் உடல்கொடுக்க,
ஒரு பெண்தன் உடலினையே அர்ப் பணித்து.
உணவுஉடை, வாடகைபோல் பெற்று லாவும்
ஒருஇழிந்த அடிமை நிலை பெண் இனத்திற்கு
உலகினிலே இனி வேண்டாம். ஒவ்வொர் பெண்ணும்
ஒரு தொழிலைச் செய்துபொருள் ஈட்டிக் காத்து.
உண்டுடுத்துக் கடமை செய்யும் உரிமை வேண்டும்."
(ஞாக.பா.545)

## பெண்ணின் பெருமை.

"பெண் வயிற்றில் உருவாகிப்
பெண்பால் உண்டே வளர்ந்தாய்!
பெண் துணையால் வாழ்கின்றாய்!
பெண்ணின் பெருமை உணர்!" (ஞாக.பா.543)

மனிதகுலத்தில் ஆண், பெண் என்ற இரு தன்மை உள்ளது.

ஆணைவிடப் பெண்ணோ, பெண்ணைவிட ஆணோ உயர்ந்தவர்களும் இல்லை. தாழ்ந்தவர்களும் இல்லை. சமமானவர்களும் இல்லை.

பெண்கள் சிறப்பானவர்கள். பிரபஞ்சத் தோற்றங்களை உருவாக்கி காத்து முடித்தும் வைக்கின்ற இறை நிலையானது புதிய உயிரை உருவாக்கக்கூடிய வல்லமையையும் பொறுப்பையும் பெண்களிடமே ஒப்படைத்துள்ளது. இதுவே பெண் இனத்தின் பெருமையும் சிறப்பும் ஆகும்.

பெண்ணின் கருப்பையிலே உருவாகி, குழந்தையாக முழுமை பெற்று, உலக வாழ்க்கையை இனிமையாக வாழ்வதற்காக அன்னையை விட்டுப் பிரிந்து வந்தாய்.

ஒரு துளி விந்து நாதக் கழிவு ஒரு முழுக் குழந்தையாக வளர்ச்சி பெற்றதற்குக் காரணம் எனது தாயின் இரத்தம்தான்.

பிறந்த பிறகும், தாயின் இரத்தத்தையே பாலாக உண்டுதான் வளர்ந்தாய்.

பெண்தான் மனைவி என்ற வாழ்க்கைத் துணையாக இறுதிக்காலம் வரை உடன் வாழ்கிறாள்.

ஆகவே பெண் வயிற்றில் உருவாகி, இரத்தத்தையே பாலாக உண்டு, பெண் துணையாலேயே வாழ்கின்ற மனிதர்களே! பெண்களின் பெருமையை உணர்ந்து போற்றுவீர்களாக.  வாழ்க வளமுடன்.

## 11. குருவின் மேன்மை

குருவின் மேன்மை உணர்ந்த சீடன்.

குருகுல பாடம் முடிந்து ஊர் சென்ற சீடன் ஒருவன் மீண்டும் குருவிடம் வந்து தயங்கியவாறே “குருவே தங்களிடம் நான் படித்ததெல்லாம் மறந்து விட்டது மீண்டும் அந்தப் பாடங்களை சொல்லிக் கொடுப்பீர்களா?” எனக் கேட்டான்.

“இதற்கா இத்துணை தயக்கம். உட்கார் சொல்லித் தருகிறேன்” என்ற குரு சீடனுக்கு முதலில் இருந்து பாடங்களை சொல்லித் தந்தார்.

“நன்றி குருவே பாடங்கள் நன்கு விளங்கிவிட்டன சென்று வருகிறேன்” எனக் கிளம்பினான் சீடன்.

ஒரு மாதத்திற்கு பின் மீண்டும் குருவிடம் வந்து “சுவாமி எனக்கு மீண்டும் பாடங்கள் மறந்து போய்விட்டன சொல்லித் தருவீர்களா?” எனக் கேட்கிறான்.

புன்னகைத்த குரு “அதனாலென்ன போதிக்கிறேன்” எனக் கூறி போதனையை ஆரம்பித்தார். சில நாட்களுக்குப் பின் நன்றி கூறி விடை பெற்றான் சீடன்.

அவன் போனதும் மூத்த சீடன் ஒருவன் “குருவே அவன் மீண்டும் மீண்டும் வருகிறான் நீங்கள் சொல்லித் தந்துகொண்டே இருக்கிறீர்களே இது முறையா?

முட்டாளான அவனால் கிரகிக்க முடியவில்லை என்றால் அவனை வரவேண்டாம் என்று சொல்ல வேண்டியதுதானே?” என்றான்.

தரிசு பூமியாக இருந்தாலும் அந்த இடத்தைப் பதப்படுத்தி தண்ணீர் ஊற்றினால் விரைவில் விளை நிலமாக மாறிவிடும் அல்லவா?

அதுபோலத்தான் அவனும். அவன் பதப்படும் வரை சொல்லி கொடுக்க வேண்டியது ஆசானாகிய எனது கடமை” என குரு சொல்ல, குருவின் மேன்மையை உணர்ந்தான் மூத்த சீடன்.

தாயுமானவர் தமது குருவான மௌனகுருவை தெட்சிணாமூர்த்தி வடிவில் இறைவானகக் காண்கிறார். “மௌனகுரு வணக்கம்” என்று பத்து பாடல்களில் தமது குருவின் பெரு கைகளை போற்றியுள்ளார்.

புத்தமிர்த போகமும் கற்பகநல் நீழலில்
பொலிவு உற இருக்கும் இயல்பும்,
பொன் உலகில் அயிராவ தத்து ஏறு வரிசையும்,
பூமண்ட லாதிக்கமும்,

மத்தவெறியினர் வேண்டும் மால் என்று தள்ளவும்,எம்
மாலும் ஒரு சுட்டும் அறவே
வைக்கின்ற வைப்பாளன், மௌனதே சிகன் என்ன
வந்தநின் அருள்வாழி காண்!

சுத்தபரி பூரண அகண்டமே ஏகமே
   சுருதிமுடிவு ஆனபொருளே!
 சொல்லரிய உயிரினிடை அங்குஅங்கு நின்று அருள்
   சுரந்துபொழி கருணை முகிலே!

சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே!
   தேடரிய சத்து ஆகிஎன்
 சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
  தேசோ மயானந்தமே." (தா.பா.121)

- தூய்மை உடையதாய், முழுமையாய், அகண்டதாய், ஏகமாய், மறைமுடிவாய் விளங்கும் பொருளே!
- சொல்லுதற்கு அருமை உடைய சீவர்களிடத்து ஆங்காங்கே நின்று, அருளைச் சுரந்து மழைபோல் பொழிகின்ற அருள் மேகமே!
- சித்தி நிலையும் முத்தி நிலையும் விளைகின்ற பூமியே!
- தேடுதற்கரிய நிலையான இருப்பாகி, எனது சித்தத்தில் குடிகொண்ட அறிவுமயமான கடவுளே! ஒளியாய் விளங்கும் பேரின்பமே!
- பதிய அமுதத்தை உண்ணும் நுகர்வும்,
- கற்பகமர நிழலில் ஒளிறுமாறு வீற்றிருக்கும் இயல்பும்,
- பொன்னுலகத்து ஐராவதம் என்னும் யானையின் மீது ஏறிவரும் சிறப்பும்,
- பூலோக அரசாட்சியும்,
- ஆகிய இவை அணைத்தும் பேராசை பிடித்த பித்தர் விரும்புவது என அவற்றை வெறுத்து ஒதுக்கவும்,

எங்களாலும் சுட்ட அறியமுடியாதவனும். ஞானானுபவத்தில் திளைக்கச் செய்பவனும். ஆகிய பெருமானே மௌனகுருவாய் எழுந்தருளி வந்தனன். அந்த நின்னுடைய திருவருள் வாழ்வதாக?

தாயுமானவரைப் போலவே குருவின் மேன்மையை பறைசாற்றுகின்றது வேதாத்திரியம்.

“இறைவெளியே அருளரசாய்
 எங்கும் நிறைந்துள்ள தெய்வம் என்றுகாட்டி
இயக்கமூலம் விண்ணோ
 இறைவெளியின் நுண் பகுதி யென்றுணர்த்தி

முறையாக விண் சுழன்று
 முழு ஆற்றலை அலையாய் இடைவிடாமல்
மோதுங்கால் இருப்பு நிலையோடு உரசி
 முட்டைகள் போல கோடி கோடி

மறைபொருளாம் நிழல் விண்கள்
 மாஆற்றலாய் எழுந்து வெளியில் சேர
மாயஉருகாந்தமென
 மாறியே அக்காந்தம் விண்கூட்டொக்க

நிறைவெளியில் விணகளிடை
 நேரமுத்தம் ஒலிஒளியாய் மணம் சுவையாய்
நிலையோடலை கருமையம்
 நியதிகளை விரித்துரைத்த குருவே வாழ்க!” (ஞாக.பா.15)

- அறியாமை என்ற இருளை நீக்கவல்லது அருள். தெய்வம் என்னும் சுத்தவெளி இருப்பாக அருளாக, அறிவாக, அன்பாக எங்குமே நிறைந்துள்ளது என்பதை அறிவிற்கு விளக்கிக் காட்டியும்,
- இயக்கங்களுக்கெல்லாம் மூலமான விண் என்பது இறை நிலையின் நுண் பகுதியாக உள்ளது என்பதை அறிவிற்கு உணர்த்தியும்,
- விண்ணின் முறையான தற்சுழற்சியினால், இவைவிடாமல் இருப்புநிலையோடு மோதுவதாலும், உரசாலாலும், சிறுசிறு முட்டைகள் போல, முழு ஆற்றலையும் அலை அலையாக

வெளிப்படுத்தவதை நிழல் விண்கள் என்னும் மாபெரும் ஆற்றலாகி,

- அவ்வாற்றல் சுத்தவெளியில் சேரும்போது இறைநிலையும் அதன் அலையும் கரைந்த, புலன்களுக்குப் புலப்படாத மாய உருவாகிய காந்தமாக மாறியும்,
- விண்களின் கூட்டுச் சேர்க்கையான பஞ்சபூதங்களில் திணிவுறும்போது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற தன்மாற்றமாகி இறைநிலையில் சம்யமாகி விடுகிறது.

இறைநிலையின் இத்தகு தன்மாற்றங்களையெல்லாம் ஒவ்வொரு கருமையத்திலும் அலை வடிவில் சுருங்கி தரமாயிருந்து, ஏற்ற கால சூழ்நிலையில் விரித்துக் காட்டுகிறது என்ற இறை நியதியை விரிவாக அறிவிற்குப் பொருந்தும் படியாக விளக்கிக் காட்டிய குருவை வணங்குவோம். வாழ்த்துவோம்.

# துணைநின்ற நூல்கள்.


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. உலக சமாதானம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
5. இணையதள தகவல்கள்.
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.

8. பட்டினத்தார் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
9. ஞானமும் வாழ்வும், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு

# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. **தியானம் பழக 100 தியான சிந்தனைகள்**
2. **அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்**
3. **கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்**
4. **குதம்பைச் சித்தரின் ஞானப்பட்டறை** (அச்சில்)

## வாழ்க்கை வரலாறு

1. **நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
2. **புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
3. **இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
4. **குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)**
5. **வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. **தன்னம்பிக்கை மலர்கள்.**
2. **டென்சனை வெல்வது எப்படி?**
3. **காலமே உன் உயிர்**
4. **வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்**
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி

2. **வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.**
3. **வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)**
4. **வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)**
5. **வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )**
6. **தினசரி தியானம்.**
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. **பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி**
10. **பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி**
11. **வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்**
12. **எல்லாம் வல்ல தெய்வமது**
13. **போரில்லா நல்லுலகம்**
14. **அதுவானால் அதுவே சொல்லும்**
15. **உய்யும் வகை தேடி அலைந்தேன்.**
16. **தினந்தோறும் வேதாத்திரியம்**
17. **வாழும் வேதாத்திரியம்**
18. **என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்**
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. **மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்**
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. **வேதாத்திரியம் கற்போம்**
23. **மனைவிக்கு மரியாதை**
24. **எல்லாம் வல்ல தெய்வமது**
25. **வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.**
26. **அவதாரப் புருஷர் அருட்தந்தை**

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்

4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. **மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்**
13. **சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.**
14. **ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்**
15. **சுகவாரியும் பேரின்ப ஊற்றும்**
16. **பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்**
17. **கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்**
18. **ஜன்ஸ்டைனும் வேதாத்திரியும்**

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.

4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3

4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?

28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு

29. தாயுமானவருடன் வாழ்வோம்

30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. **தன்னம்பிக்கை மலர்கள்.**
2. **டென்சனை வெல்வது எப்படி?**
3. **காலமே உன் உயிர்**
4. **வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.**
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்

12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்

13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து

28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1

63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்

98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
108.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்